## குருணாகல் பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூன் 30 விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குருணாகல் பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மிங்ஹெட்டிய நூலகக் கட்டடத்தினதும் தெமஎஸ்ஸ சனசமூக நிலையத்தினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும் | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து கணக்கிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கின்றேன். |
| (ஆ) | ரூபா. 7,175,000 பெறுமதியான 04 காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | குறித்த தவறினை எதிர்வரும் வருடத்தில் சீர் செய்வதாக குறிப்பிடுகின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டில் நலன்புரி மற்றும் பொது வசதிகளுக்காக வழங்கப்பட்ட நன்கொடை நிதி, அங்கத்துவ நிதி மற்றும் உதவிகள் ரூபா. 5,362,181 ஆக இருந்த போதும் அது வருமானச் செலவுக் | சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | எதிர்வரும் வருடத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கில் ரூபா. 5,313,556 எனக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக அச் செலவு ரூபா. 48,625 இனால் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று 04 கணக்குகளுடன் தொடர்பான நிதிக்கூற்றுக்களின் அடிப்படையிலான மீதி மற்றும் அட்டவணைகளின் அடிப்படையிலான மீதி ஆகியவற்றுக்கிடையில் ரூபா. 45,281,335 விதியாசம் காணப்பட்டது. | குறித்த வித்தியாசங்களை ஒப்பீடு செய்து சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டம். | அட்டவணை சமர்ப்பிக்கப் படாத மீதிகளை எதிர்வரும் ஆண்டில் உறுதி செய்து கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | பெறுமதி ரூபா. 1,499,420 ஆகவிருந்த 04 கணக்குகளுடன் தொடர்பான தேவையான தகவல்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்வதற்கான சாட்சிகள்/அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | <u>முற்பணம்</u><br><br>பல வருடங்களாக காணப்பட்டு வருகின்ற தொகையாகும். உறுதி செய்ததன் பின்னர் நீக்குவதற்கான நடவடிக்கை எடுப்பேன்.<br><br><u>வேறு நிறுவனங்களீ மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள்</u><br><br>சபையிடம் எந்த அத்தாட்சிகளும் இல்லை<br><br><u>ஊழியர் பிணை வைப்பு</u><br><br>ஊழியர் பிணை வைப்பு ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br><u>முதலீடுகள் - ஏனைய</u><br><br>சபையிடம் எந்த எழுத்து மூல சான்றுகளும் இல்லை. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றம் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுக்கான வழிகாட்டல் | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி | | | |
| i. விதி 19 | சபையினால் ஒரு சந்தர்ப்பத்தில் பல துணை அடியிதழ்சேர் புத்தகங்கள் ஒருவருக்கு வினியோகிக்கப்பட்டிருந்தன. | துணை அடியிதழ்சேர் புத்தகங்கள் வழங்கும் போது குறித்த விதிகள் பின்பற்றப்படல் வேண்டும் | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை நாம் ஏற்றுக்கொள்கிறோம் |
| (ii) விதி 212 | பொருட்கள் களஞ்சியத்திற்குக் கிடைப்பதற்கு முன்னர் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | விதிகள் பின்பற்றப்படல் வேண்டும் | பெறுகை பிரமாணங்களுக்கு இணங்க குறித்த கொள்வனவு இடம் பெறவில்லை எனவும் மீண்டும் அவ்வாறான தவறுகள் நடைபெறாது எனவும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i ii ஆம் அத்தியாயத்தின் 11.1 மற்றும் 11.5 பிரிவுகள | 03 வருடகால எல்லையைக் கடந்துள்ள 05 உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சேவையில் நிரந்தரமாக்குவதற்குத் தேவையான தகைமைகளை பெற்றிருந்தால் குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | சேவையில் நிரந்தரமாக்குதல் தொடர்பான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii | viii ஆம் அத்தியாயத்தின் 10 மற்றும் 10.1 பிரிவுகள் | விடுமுறை தினக் கொடுப்பனவு வழங்கப்படும் போது 08 மணித்தியாலங்கள் பூரணமடையாத கால எல்லைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | தாபன விதிக் கோவையின் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 172,537,834 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 169,539,235 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உபசரிப்புச் செலவுகளுடன் தொடர்பான நாளாந்தப் பட்டியல்கள் அனைத்தும் சபையின் அலுவலக உதவியாளர் ஒருவரினால் சேகரித்து வைக்கப்பட்டு மாதாந்தம் காசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு அவரது பெயரில் ரூபா. 559,723 பெறுமதியான காசோலைகள் பெறப்பட்டிருந்தன. | குறித்த பிரிவினருக்கு கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் சபைணின் உபசரிப்புச் செலவுகளை பெறுகை செயன்முறைக்கு அமைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2019<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 11,472,513 | 12,337,759 | 13,925,634 | 7,735,198 | 11,531,440 | 13,769,491 | 12,123,518 | 8,070,706 |
| வாடகை | 2,851,470 | 2,601,139 | 2,594,780 | 15,168 | 2,894,440 | 2,505,013 | 2,248,297 | 14,909 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,645,300 | 2,086,005 | 2,086,005 | - | 1,839,800 | 1,778,204 | 1,778,204 | - |
| ஏனைய வருமானம் | 220,354,657 | 278,295,690 | 213,362,838 | 105,253,983 | 164,753,680 | 258,258,244 | 341,266,731 | 41,196,061 |
| மொத்தம் | 236,323,940 | 295,320,593 | 231,969,257 | 113,004,349 | 181,019,360 | 276,310,146 | 357,416,750 | 49,281,676 |

## 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு குடாகல்கமுவ அலுவலகத்தினதும் மற்றும் வெல்லவ உப அலுவலகத்தினதும் வீதவரி நிலுவைகள் முறையே ரூபா. 855,648 மற்றும் 3,365,659 ஆகவிருந்தது. | பிரதேச சபைச் சட்டம் மற்றும் விதிகளின் பிரகாரம் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீதமுள்ள நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கிறேன். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வெல்லவ உப அலுவலகத்தின் 225 ஆதனங்களிலிருந்து ரூபா. 230,043 நிலுவை ஏக்கர் வரி மீதி காணப்பட்டது. | பிரதேச சபைச் சட்டம் மற்றும் விதிகளின் பிரகாரம் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரி மதிப்பீடு தற்பொழுது நடைபெற்று வருவதுடன் அவ்வறிக்கைகளைப் பெற்று பதிவேடுகளை நாளதுவரையாக்கி நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் தேவைகளுக்கேற்ப உப விதிகளை விதிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் தேவைகளுக்கேற்ப உப விதிகளை பிறப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் ஏற்படும் சேவை அவசியங்களின் அடிப்படையில் மீதமுள்ள விடயங்களுக்கான உப விதிகளை பிறப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவிக்கிறேன். |

#### (ஆ) கைவிடப்பட்ட திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மல்லவபிடிய மற்றும் வெல்லவ பொது சந்தை கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலைகளுக்காக வரவு செலவுத் திட்டத்தில் ரூபா. 40,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும் அவ் வேலைகள் 2019ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி குறித்த வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும். | இத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு தேவையான மதிப்பீட்டினைத் தயாரித்தல், அடிப்படைத் திட்டத்தினைத் தயாரித்தல் நடவடிக்கைகள் தற்பொழுது நிறைவு செய்யப்பட்டுள்ளதென் பதை கணக்காய்விற்கு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 2,396,728 செலவில் 2016ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தம்பொக்க உக்காத கழிவுகள் வேறுபிரித்தல் நிலையம் பயன்படுத்தப்படாத நிலையில் இருந்தது. | பயன்பாடற்ற நிலையில் உள்ள சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏதிர்காலத்தில் உக்காத கழிவுகளை ஒன்று சேர்த்து வேறு படுத்துவதற்கான ஒரு தொகுதியையும், மின்சாரம் நீர் போன்ற அடிப்படை வசதிகளையும் பெற்று அக் கட்டிடத்தை உக்காத கழிவுகளை களஞ்சியப்படுத்தும் ஒரு நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கிறேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்ததுடன் 09 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்தன. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அதற்கமைவாக வரவு செலவின ஆவணங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள உபாய ரீதியான நகர அபிவிருத்தித் திட்டத்துடன் சம்பந்தப்பட்டு நிலையான அபிவிருத்தி இலக்குகளை தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக தயவுடன் தெரிவிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று பெற வேண்டிய கணக்குகளில் ஒரு வருடத்தைத் தாண்டியிருந்த ரூபா. 48,122,553உம் 05 வருடங்களைத் தாண்டியிருந்த ரூபா. 31,331,765உம் காணப்பட்டது. | மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன்பட்டோர் மீதிகளை உறுதி செய்துகொண்டதன் பின்னர் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய கணக்குகளில் 05 வருடங்களைத் தாண்டியிருந்த அட்டவணைகள் அற்ற ரூபா. 22,930,189 காணப்பட்டது. | செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இத் தொகை அட்டவணைகள் அற்ற ஒரு தொகையாகக் காணப்படுவதால் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**பணியாளர் வெற்றிடம் மற்றும் மிகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவில் 16 அதிகாரிகளுக்கான வெற்றிடம் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு இணைத்துக்கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. |
| (ii) | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014இன் அடிப்படையில் இணைத்துக் | பதவியுடன் தொடர்பான கடமைகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். | 25/2014இன் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பெண் ஊழியர்கள் மூவர் |

| | | |
|---|---|---|
| கொள்ளப்பட்ட 04 பணியாளர்கள் குறித்த கடமைகளில் ஈடுபடுத்தப்படாது அலுவலக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | அவர்கள் காட்டிய விசேட திறமைகளின் அடிப்படையில் சேவைக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன அதில் ஒரு ஊழியர் நூலக உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வீதவரி சொத்து மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும் இறுதியாக சொத்துகள் மதிப்பீடு 2011ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்த காலத்தினுள் சொத்து மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வரி அறவிடப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுத் தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டப்பட்ட போதும் இதுவரை மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெறவில்லை என்பதை தயவுடன் தெரிவிக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**கையேற்கப்படாத சொத்துக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ரூபா. 84,469,200 பெறுமதியான 05 மருத்துவ நிலையங்களைக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரதேச செயலகத்தினால் எமக்கு குறித்த காணி கையளிக்கப்படாதிருந்த போதும் தற்பொழுது கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

## 3.6 பெறுகைகள்

### வினியோகம் மற்றும் சேவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா. 100,740 பெறுமதியான 02 பைபர் ஏணிகள், ரூபா. 97,500 பெறுமதியான 300 கோப்பைகள், ரூபா. 634,930 பெறுமதியான முன்பள்ளி மாணவர்களுக்கான 2,097 குடைகள், ரூபா. 169,000 பெறுமதியான 130 சாரிகள் கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | கொள்வனவுகளின் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படல் வேண்டும். | தவறுதலாக பிழையான ஒரு திகதி இடப்பட்டு கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் முகவரி குறிக்கப்பட்டிருந்த போதும் அலுவலகப் பிரதியில் எழுதுவதற்கு தவறியுள்ளது. இவ்வாறான தவறுகள் இதன் பிறகு ஏற்படாது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.8 (அ) பிரிவின் பிரகாரம் ஏலதாரர் ஏலத்தில் கைச்சாத்திட்டிராத சந்தர்ப்பத்தில் ஏலம் நிராகரிக்கப்பட வேண்டியிருந்த போதும் சமையல் உபகரணத் தொகுதி, பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் VIP கூடாரங்கள் கொள்வனவின் போது அதற்கமைவாக செயற்பட்டிருக்கவில்லை. | கொள்வனவுகளின் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படல் வேண்டும். | ஏல ஆவணங்களில் கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை இடப்படும் போது விசேடமாகக் கருத்தில் கொள்ளப்படுகின்ற போதிலும் தவறுதலாக குறித்த விலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவிக்கின்றேன். |